## 4. திருக்காவலூர்க் கலம்பகத்தில் மரியன்னையின் மாண்பு

அருட்சகோ. முனைவர்
தி.நிர்மலா,
முதல்வர்,
ஜெ.அ. மகளிர் கல்லூரி,
பெரியகுளம்.

முனைவர்
எ.மே.கொலாஸ்டிக்கம்மாள்,
பெரியகுளம்

**முன்னுரை:**

வீரமாமுனிவர் இறையருளால் தாம் பெற்ற கவித்துவ வரத்தால், படைப்பாற்றலால் தமிழ்மொழிக்கு அருந்தொண்டாற்றியுள்ளார். தமது துறவற அர்ப்பண வாழ்வில் மக்களுக்கு நன்மைகள் பல செய்தார். தூய மரியன்னையின் பக்தனாகத் தொண்டனாக இருந்து மரியாளின் புகழ் பரப்ப ஆலயங்கள் கட்டியும், நூல் இயற்றியும் பெரும்பணியாற்றினார். வீரமாமுனிவரின் காலத்தின் கீதமாக, காவியத்தின் இன்பமாக, கலம்பகத்தேன் பாமாலையாக திருக்காவலூர்க் கலம்பகத்தை அருளியுள்ளார். திருக்காவலூரில் எழுந்தருளியுள்ள அடைக்கல மாதாவைப் பாட்டுடைத்தலைவியாகப் பெற்றொளிர்வது திருக்காவலூர்க் கலம்பகமாகும். தமிழில் தோன்றியுள்ள கலம்பகத்தில் பெண்பால் கலம்பகமாகவும் கிறித்தவ இலக்கியங்களில் உள்ள கலம்பக இலக்கியமும் இது ஒன்றேயாகும். இந்நூல் பேரின்பச் செய்தியையும், திருமறை உண்மைகளையும், அடைக்கல அன்னையின் மகத்துவத்தையும், கிறித்துவின் மீட்பையும் விளக்கக் கூடிய சிறந்த நூலாகும் இத்தகைய சிறப்புப் பெற்ற கலம்பகத்தில் மரியன்னையின் மாண்பைப் பற்றி ஆய்வோம்.

**மரியன்னை பாற்கடலில் தோன்றிய "கன்னிச்சங்கு":**

வீரமாமுனிவர் திருக்காவலூர்க் கலம்பகத்தின் காப்புச்செய்யுளில் அன்னை மரியாவைப் பாற்கடலில் தோன்றிய கன்னிச்சங்கு என்று உருவகித்துப் பாடியுள்ளார். சங்கு சிப்பி முதலானவை கடலின் மேல் மட்டத்திற்கு வரும்போது மழைத்துளியை ஏற்றுக் கருக்கொண்டு முத்தாக உருவாகின்றது அதுபோல விண்ணிலிருந்து வந்த தூய ஆவியின் வல்லமையால் கன்னிமரி கருத்தாங்கி இயேசு என்னும் முத்தை ஈன்றதால் கன்னிச்சங்கென உருவகித்து, மரியன்னையின் மாண்பை, கன்னித்தன்மையை, அழகுறச் சித்திரித்துள்ளார். உருவிலா இறைவன் மனித உருவில் உதிக்க, கருவின்றி கருத்தாங்கிய கன்னித்தாய் என்பதனை,

> "உருவில்லா னுருவாகி யுலகுல *லொருமகனுதிப*க்
> கருவில்லாக் கருத்தாங்கிக் கன்னித்தாயாயினையே" *1



என்று பாடலின் வழி மரியன்னையின் கன்னித்தன்மையை அழகுற சித்திரித்துள்ளார்.

**மரியன்னை இறைவனின் தாய் - மகள்:**

மரியன்னையை இறைவனின் தாயாகவும் மகளாகவும் திகழ்வதை பின்வரும் பாடல் அழகுற வெளிப்படுத்துகின்றது.

> "உந்தையை யீன்று நீ யொரு வற்கீங்கரும்
> வந்தை யோடன்னையு மகளுமாயினை
> கனியரும் பயனோடு கலந்த பூவிணைத்
> தனியருள் கன்னியுந் தாயுமாயினை" *2

என்ற வரிகளில், இறைவனின் தாயாகவும், மகளாகவும் மரியா விளங்குவது குறிப்பிடப்படுகின்றது. இறைவனின் தாயாக திகழ்ந்து விளங்குகின்ற உன்னத நிலையினை சித்திரித்துள்ளார்.

**மரியன்னை ஈன்ற மகனின் மகிமை:**

திருக்காவலூரில் எழுந்தருளியுள்ள நங்கையின் மகனாகிய இறைவனின் தோள்கள் விசும்பிலுள்ள நிலவு, சூரியன், விண்மீன் முதலியவற்றையும் உலகிலுள்ள நவமணி மற்றும் ஒளி தரும் பொருள்களையும் பூ, பழம், உணவு முதலியவற்றையும் உலகங்களிலுள்ள அனைத்தையும் அளவிலலாமல் உண்டாக்கி மானிடர்க்கு பயன் அளித்ததை, வீரமாமுனிவர் கலம்பகத்தில்,

> "வெளிமதி கதிருடுக்குல, மணி நிதியொளி முகத்தவை
> மலர் கனியமு துமற்றைய பலவுலகுள வனைத்தையு
> மீறிலா தெங்கணு மருளிப் பயந்தன" *3

என்ற பாடலின் வழி மரியன்னையின் மகனாகிய இயேசு மானிடர்க்கு நன்மையானவற்றை அளித்து காத்து வருகின்ற செய்தியினை அழகுற சித்திரித்துள்ளார்.

**நிலவினை ஒத்த வானுலக அரசி:**

வானவர் இறைவனின் அன்னையாகிய உம்மை வாழ்த்தித் தொழுது உனக்குக் கிடைத்த பெருமையை எண்ணிப் பாராட்டி மலர் போன்ற உன் திருவடிகளை வருடவும் இவ்வுலக சாபம் நீங்கப்பெறவும், நிலைபெற்ற ஆன்மாக்கள் பாவத்தினின்று மீட்கப்பட்டதால் பெருமகிழ்ச்சியடையவும், வானகபடையினர் உன்னை சூழ்ந்து காவல் செய்யவும், வானகத்தின் அரசர்களாக விளங்கும் தூயவர்கள் மரியா கட்டளையிடும் பணிகளைச் செய்யவும், விண்மீன் கூட்டம் சூழ்ந்து அழகு செய்யும் நிலவினை ஒப்ப, வானுலக அரசை உடையவள், மரியே நீ ஆயினை என்பதனை திருக்காவலூர்க் கலம்பகத்தில்,

"விண்ணுலகம் புகழ்ந்தேத்தி வியந்நலர் சேவடி வருட
மண்ணுலகந் துயர் நீங்க மன்னுயிர்கள் சிறந்துவப்ப
வான் றளங்கள் புறங்காப்ப வானரசர் பணி கேட்ப
மீன்றளங்க ளணிமதி போல் விண்ண ரசாளாயினையே" *4

என்ற பாடல் வழி மரியன்னை "வானுலக அரசி" என சிறப்பித்து புகழப்படுகின்றாள்.

**மரியாளின் எழில் தோற்றம்:**

மரியே நீ விண்ணக வாயிலைத் திறந்து விட்டாய், கடவுளுடைய எண்ணத்தைத் திறந்து காட்டினாய், கதிரவனை ஆடையாக உடுத்திக் கொண்டாய், விண்மீன்களை முடியாக அணிந்து, நிலவின் மேல் நிற்கக்கூடிய திருவடியுடையவளாவாள், மானிடர்க்கு அடைக்கலம் தருமிடமாய் இருக்கிறாய், கடவுளின் அருளை உன் ஆற்றலாக உடையவளாக இருக்கிறாய், பரம்பொருள் தங்கும் கோவிலாகவும் விளங்குகின்றாய் என்பதனை வீரமாமுனிவர்,

"விண்டிறந்தனை, எண்டிறத்தனை
பானணிந்தனை, மீனணிந்தனை
மதி பதத்தினை, கதிபதத்தினை
அருள் வலத்தினை, பொருளிடத்தினை". *5

என மரியாளின் அருள்மிகு எழில் தோற்றத்தினை வருணிக்கின்றார். இன்னும் மரியாளின் பேரழகினை,

"மீனரும் சிரத்தழகி விண்ணரும்பும்
சிரத்தழகு விரிவான் வீட்டைத்
தானரும்பு முகத்தழகி தயையரும்பக்
காவனலூர் தங்கினாளே". *6

என்ற பாடலில் மரியாள் அடியவனாகிய வீரமாமுனிவர். மரியாளின் அழகினை வர்ணிக்கும் போது நிலவு போன்று ஒளி வீசும் திருவடிகளையும், இனிமைதரும் ஒளிபொருந்திய கதிரவனைப் போன்ற உடையழகும், இன்பந்தருகின்ற சிங்க நெடுங் கொடியாகிய விருதுக் கொடியின் அழகுடையவள் என்றும், பகல் நேரத்திலும் மறைந்து ஒளிரும் பன்னிரு விண்மீன்களும் ஒளி விடுகின்ற முடியழகுடையவள் என்றும், வானுலக வீட்டைத் தானே ஒளிரச்செய்கின்ற முகஅழகும் உடைய அடைக்கல அன்னை உலகுக்குக் கருணை புரிய 'திருக்காவலூர்' என்ற ஊரில் குடி கொண்டிருக்கிறாள் என அழகுற சித்திரித்துள்ளார்.

**மரியன்னையின் வெற்றிச்சின்னங்கள்:**

குளிர்ந்த ஒளியைப் பொழிகின்ற நிலாவினால் ஏந்தப் பெற்ற அழகிய திருவடிகள் விளங்கும் படியாகவும், தெளிந்த ஒளியைத் தருகின்ற விண்மீன்கள் பதித்த அழகிய அரச முடியைக் கொண்ட நினது முகம்



ஒளி வீசவும் அடியார்கள் மேல் மிகுந்த கனிவு கொண்டு அவர்களது மனமாகிய தாமரை மலரும் படியாகக் கதிரவனை ஆடையாக உடுத்தி மேனி அழகுற பொலிவுறவும், ஒப்பற்ற இறைவனை நின்மகனாக ஈன்றும் அரசிக்குரிய அணிகலன்களைச் சூடிக் கொள்ளுதல் நினது கொற்றத்துக்குரிய வெற்றிச் சின்னங்களாகும். என்பதனை வீரமாமுனிவர்,

"தண் சுடர்க்காண் மதிக்குழவி தாங்கிய பூவடி விளங்கத்
தெண் சுடர்க்காலுடு வணைந்த திருமுடிகொள் சிரமிமைப்பப்
பணி யுயிர்த்து மனங்குளிர்க்கப் பருதி யுடுத்துடலிங்கத்
தனி யுயிர்த்து மரசணியாத் தரிப்பது நின் விருதாமோ?" *7

என்ற பாடலின் வழி திருக்காவலூரில் எழுந்தருளியுள்ள அன்னையின் அரசிக்குரிய வெற்றிச் சின்னங்களை அழகுறச் வருணித்துள்ளார்.

**கலம்பகத்தின் புதிய உறுப்பாகிய "சமூக உல்லாசம்" வழி மரியன்னையின் மாண்பு:**

திருக்காவலூர்க் கலம்பகத்தில் காணப்படும் புதிய உறுப்பாகிய சமூக உல்லாசம் என்பது அடைக்கல அன்னை தனது வாகனமாகிய சந்திரன் மீது எழுந்து வருகையில் அவளது சமூகத்தில் மக்கள் அடையும் மகிழ்ச்சியைக் குறிப்பதாகும். அடைக்கல அன்னை தேரில் பவனி வருகின்ற அழகினை,

"வினையுற, மனையுற மருளட வருளிட
வாகன மாமிற் தெழுந்து வரவே
விவை வடி வடியடி யுறையுறு மறுவறு
காவலூரின் வதிந்தனுகினாள்". *8

என்ற வரிகளில் அடைக்கல அன்னை தனது வாகனத்தில் பவனி வருகையில் மக்களின் தீவினைகள் மறைந்துபோகவும், மாந்தர் அனைவரும் அடையும் பேரின்ப மகிழ்ச்சியையும் மக்களது மன மயக்கத்தை அழிக்கவும், மானிடர்க்கு அருள்செய்யவும் ஊர்தியாகிய நிலாவின் மேல் எழுந்தருளியுள்ள மரியன்னை வீதியுலா வரும் போது பக்த கோடிகள் அடையும் உள்ளக்களிப்பினை அழகுற வெளிப்படுத்தி, கலம்பகத்தில் 'சமூக உல்லாசம்' என்ற புதிய உறுப்பினை உருவாக்கி, அதன் வழி மரியன்னையின் மகிமையை மாண்புற விளக்கியுள்ளார்.

**வீரமாமுனிவர் மரியன்னை மேல் கொண்ட பக்தி வழி மரியன்னையின் மாண்பு:**

வீரமாமுனிவர் மரியன்னை பக்தி குலசேகர ஆழ்வார் திருவேங்கட நாதரிடம் கொண்டிருந்த பக்தியை நினைவூட்டுகின்றது. மரியன்னையின் மேல் தமக்குள்ள பக்தியை மனம் உருகிப்பாடும் விதத்தைக் காண்போம்,

"தாள் அணிந்த மதிமுதலாத் தமியனும் அக்
கமலத் தாள் தாங்கி லேனோ?"

கோள் அணிந்த குழல் அணிதார் குடை வண்டாப்
புகழ் பாடி மது உண்ணேனோ?
வாள் அணிந்த வினைப்படை வெல்வலிச் சிங்கம்
ஈன்ற ஒரு மானாய் வந்தாள்
கேள் அணிந்த காவல் நல்லூர்க் கிளர் புனைத்துப்
பசும் புல்லாய்க் கிடவேன் நானோ?" *9

மரியன்னையின் திருவடித் தாமரையைத் தாங்கும் சந்திரனாய்ப் பிறக்க மாட்டேனா? உடுக்கள் இலங்கும் அவளது கூந்தலில் அணியப் பெற்றுள்ள மலர்களைக் குடையும் வண்டாகப் பிறந்து, அவ்அம்மையார் செவிக்கு இன்னிசையூட்டி அம்மலர்களின் மதுவை உண்டு களித்திருக்க மாட்டேனா? திருக்காவலூர்க் கோவிலைச் சார்ந்த சோலையில் வளரும் பசும்புல்லாகக் கிடக்கும் பேறு கிடைக்காதா? என்றெல்லாம் பாடிப்பரவி மாதாவின் மட்டில் தமக்கிருக்கும் பக்தியை வெளிப்படுத்தி, தமிழ் மணத்துடன் தெய்வமணம் கமழ மாதாவின் புகழைச் சித்திரிக்கின்றார்.

**அடைக்கல நாயகியின் சிறப்பு:**

பிறை நிலவின் மேல் நிற்கும் திருவடிகளை உடையவளே, அறிவுக்கு எட்டாத மறைநூலே, மயக்கம் நீங்கிய நன்னெறியே, அருள் நிறைந்த மேகமே, பலராலும் போற்றி வணங்கப்படுகின்ற ஒழுக்கமுடையவளே, அறிவு ஒளிரும் கதிரவனே, உலகின் துணையாகிய மீட்பரைக் கருத்தாங்கியவளே, ஒழுக்கத்திற்குப் பொருந்திய வேலியே, அடைக்கலம் தருகின்ற தாமரையே, ஞானச்செல்வம் தோன்றுகின்ற தூய்மையே, இறைவன் உமக்கு அளித்த அருட்செல்வத்தை எமக்கு வழங்கும் பாதுகாப்பே என அடைக்கல அன்னையின் சிறப்பினை வீரமாமுனிவர் புகழ்ந்துரைப்பதைத் திருக்காவலூர்க் கலம்பகத்தில்,

"மதியெழுந்த பாதமே, மதிகடந்த வேதமே
மருண்மறந்த நீதமே யருள் சிறந்த கீதமே
துதியெழுந்த சீலியே விதி விரிந்த மாலியே
துணை யெழுந்த சூலியே தினையமைந்த வேலியே
கதியரும்பு கமலமே நிதியரும்பு மமலமே
கடவுடந்த பதவியீங் கிடவுயர்ந்த வுதவியாய்
நதி வழங்கு காவலூர்ப் பதிவழங்கு காவலே"[10]

என்ற பாடல் வழி மரியன்னையின் மாண்பினை அழகுற உணர்த்துகிறார் வீரமாமுனிவர்.

**அன்னையின் காட்சி வழி மரியன்னையின் மாண்பு:**

திருக்காவலூரில் எழுந்தருளியுள்ள தேவ அன்னையைக் காட்சியில் கண்டதைக் கூறும் முனிவர் அந்த அன்னையானவள் நலன்களையெல்லாம் மழையாகச் சொரிபவளாய், இடி இடிக்காத வான் முகிலாய், நிறை நிழலைத் தன்னகத்தே கொண்டிருக்கும் சோலையாய், ஒப்பற்ற



அருட்கொடைகளைக் கொண்டு உப்பற்ற பெருங்கடலாய்த் தோன்றியதை அவரது கண்கள் கண்டதாகவும் அக்காட்சியில் தோன்றியவள் திருக்காவலூர் அன்னையே என்றும் சாட்சி பகர்கின்றார். இதனை,

"தொக்க நலமெலாம் பெய்திடியாதொரு தோய் முகிலாயப் பூ
புக்க நிழல் கொண்டிருள் புகவிற்பொழிற் பொங்கலை நீ
ரொக்க வரையா வரங் கொண்டு வரிலவோர் நிலையா
யக்க மகிழக் கண்டேன் றிருக் காவலூரங்கனையே" *11

என்ற பாடல் வழியாக அன்னையின் தன்னிகரற்றச் சிறப்பினை அறிய முடிகின்றது.

**முடிவுரை:**

இவ்வாறு திருக்காவலூரின் மரியன்னைக்கு திருக்கோவில் எழுப்பி திருத்தலமாக்கியவர் வீரமாமுனிவர். ஆண்டுதோறும் அன்னைக்கு விழாவெடுத்து தாய்த்தெய்வ வழிபாடாக்கிச் சிறப்பித்தவர். திருக்காவலூர்க் கலம்பகத்தில் மரியன்னையை கன்னிச்சங்காக சிறப்பித்து விண்ணுலக அரசியாக மானிடர்க்கு வரங்களை பொழியும் கார் மேகமாகவும் இறைவனின் உன்னத தாயாகவும் சிறப்பித்துக் காட்டியுள்ளார்.

**குறிப்புகள்:**

1. ம.ஆரோக்கியசாமி, அ.திரவியம், பி.மரியதாஸ், (உரை ஆ) வீரமாமுனிவர் அருளிய திருக்காவலூர்க் கலம்பகம், ப.4
2. மு.நூ. ப.26
3. மு.நூ. ப.44
4. மு.நூ. ப.4
5. மு.நூ. ப.29-30
6. மு.நூ. ப.57
7. மு.நூ. ப.8
8. மு.நூ. ப.112
9. மு.நூ. ப.108
10. மு.நூ. ப.209
11. மு.நூ. ப.35

**துணை நின்ற நூல்கள்:**


1. ஆரோக்கியசாமி ம., திரவியம் அ., மரியதாஸ் பி., (உரை ஆ), வேதநாயகம் இலக்கிய மன்றம், குடந்தை, 2002.
2. லூர்து சாமி ஆ., வீரமாமுனிவர் இலக்கியப் பூஞ்சோலை, அருள் ஆனந்தர் வெளியீட்டுக் கழகம், கருமாத்தூர், மதுரை. 2006.
3. மணி வளன் சி. தமிழ் வளர்த்த வீரமாமுனிவர், கிறித்தவ ஆய்வு மையம், தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சி. 2013